**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No**. 06/2024

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடாஜலம் | கணவர் பெயர் | : ---- |
| தகப்பனார் பெயர் | ராமசாமி | வயது | : 53 |
| கிராமம் | சூரப்பள்ளி | நாள் | : 24.09.2025 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 19.12.1957 ம்தேதியிட்ட என் தந்தை ராமசாமி பெயரிலுள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. 25.10.2017 ம் தேதியிட்ட எனது பெயரிலான குடும்ப ஏற்பாடு ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. ச.எண்.164/6B2 ல் கண்ட சொத்திற்கு என் பெயரிலான பட்டா எண்.3968 கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. ச.எண்.164/6B1 ல் கண்ட சொத்திற்கு என் பெயரிலும், என் தந்தை ராமசாமி பெயரிலும் உள்ள கூட்டு பட்டா எண்.1826 கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. 10.10.2023 ம் தேதியில் நான் மேட்டூர் வட்டாட்சியரிடம் தாவா சொத்தை அளவீடு செய்யவேண்டி வழங்கிய மனு மற்றும் அதற்கு செலுத்திய கட்டணத்திற்குண்டான சலான் கை நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. 18.08.2023 ம் தேதியில் நான் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு கை நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. கடந்த 18.10.2023ம் தேதியில் நங்கவள்ளி சார்வு ஆய்வாளர் அவர்கள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.**7 ஆகும்.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணைக்காக வழக்கு 23.10.2025ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.